# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்
# வினா விடை நேரம்

## வினா எண் 316
## தலைப்பு :- "ஆன்மீக பயிற்சிகளில் ஈடுபடுவது எதற்காக"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 221-227லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி:ஸ்வாமி ஆன்மீக பயற்சிகளில் ஒருவர் தினசரி ஈடுபட வேண்டியது கட்டாயம் தானா.

ஸ்வாமியின் பதில்:
ஆம்.தினசரி ஆன்மீக பயற்சிகளில் ஈடுபட வேண்டியது மிகவும் அவசியமானது.

நீங்கள் பாத்திரங்களை தினசரி துலக்கி சுத்தம் செய்கிறீர்கள் அல்லவா.
நீங்கள் இறைவன் மீது உறுதியான நிலைபிறழாத நம்பிக்கை பெறும் வரை, உங்களை முழுமையாக இறைவனிடத்திலே சரணாகதி செய்து கொள்ளும் வரை தினசரி ஆன்மீக பயற்சிகளில் ஈடுபட வேண்டியது மிகவும் அவசியம் தான்.

வயல் வெளிகளில் நெற் பயிற்களுக்கு தினமும் நீர் பாய்ச்சா விட்டால் அவை பட்டுப் போகும் அல்லவா.ஆனால் உயரமாக வளருகின்ற யூகலிப்டஸ் மரம்  ஆலமரம் வேப்ப மரம் இவைகளுக்கு தினமும் நீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை.

ஏன் தெரியுமா. அவைகளின் வேர்கள் நீண்டு வளர்ந்து பூமிக்கு அடியில் உள்ள நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து கொண்டு நன்கு வளருகின்றன.

ஆனால் சிறிய செடிகளோ அவைகளின்  வேர்களால் நீண்ட தூரம் பூமிக்கு அடியில் ஊடுருவ முடியாமல் போவதால் அவைகளுக்கு வெளியிலிருந்து நீர் பாய்ச்சுவது அவசியமாகிறது

அது போல் உங்கள் இறை நம்பிக்கை என்னும் வேர் அடி மனதின் ஆழம் வரை ஊடுருவி சென்று பரவும் வரை ஒவ்வொரு வரும் ஆன்மீக பயற்சிகளில் தினசரி ஈடுபடதான் வேண்டும்.இன்றைக்கு உங்களுடைய

இறை நம்பிக்கை என்பது சிறிய செடியின் வேர்களை போல் வலுவில்லாததாகவே இருக்கிறது.

எனவே இறை நம்பிக்கைக்கு வலு சேர்க்க நீங்கள் தினசரி ஆன்மீக பயற்சிகளில் ஈடுபடதான் வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஆனால் ஸ்வாமி ஆன்மீக பயற்சி என்பது எளிமையாக இல்லாமல் கடினமானதாக உள்ளதே.எப்படி அவற்றை பயிலுவது.

ஸ்வாமியின் பதில்:
வாழ்க்கையில் எந்த இலக்கை அடைவதற்கும் பயற்சி அவசியம் தானே.
நடப்பது பேசுவது படிப்பது சாப்பிடுவது எழுதுவது என எல்லாவற்றிற்கும் முறையான பயிற்சி தேவைபடுகிறது
சங்கீத கலைஞர்கள் அதிகமாக பாடி பார்த்து பயிற்சி செய்து கொள்கிறார்கள்.

கார் ஓட்டுவதற்கு கூட பயிற்சி தேவை.வெவ்வேறு இடங்களில் பொருத்தபட்டுள்ள ஸ்டியரிங் ப்ரேக் களட்ச் இவைகளை இயக்குவதற்கு பழக வேண்டும் அல்லவா.

அதை போலவே ஆன்மீக சாதகருக்கு ஆன்மீக பயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஒரு மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு ஒரு குருவின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்று எங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டுகிறோம் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
குருவினிடத்தில் சீடன் முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும்.

நீங்கள் புதிதாக ஒரு ஊருக்கு சுற்றுலா பயணம் செல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஊரை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்பதால் ஒரு வழிகாட்டியை நீங்கள் அமர்த்தி கொள்கிறீர்கள் அல்லவா.
அதை போலவே சிறந்த ஞானமும் பரந்த அனுவமும் கொண்ட குருவின் அறிவுரைகளை எந்த காரணத்திற்காகவும் கேள்வி கேட்பதோ சந்தேகபடுவதோ கீழ்படியாமல் இருப்பதோ கூடாது.

நீங்கள் சாலையில் பயணம் மேற்கொள்ளும் போது ஆங்காங்கே வழிகாட்டி பெயர்பலகைகளை பார்க்கிறீர்கள்.

நீங்கள் செல்ல வேண்டிய இடத்தை அடைவதற்கு அவை வழி காட்டுகின்றன.

ஆனால் அவைகளே உங்களை சுமந்து கொண்டு போய் அந்த ஊரில் சேர்பதில்லையே.

இது போலவே குருவானவர் ஆன்மீக பாதையில் நீங்கள் முன்னேறி செல்வதற்கான விஷய ஞானங்களை உங்களுக்கு உபதேசித்து வழி காட்டுகின்றார்.

நீங்கள் தான் அவர் அறிவுரையின்படி நடந்து இலக்கை அடைய வேண்டும்.உங்கள் சார்பாக வேறு யாரும் அதை செய்ய முடியாது.

கு- என்றால் இருட்டு.ரு- என்றால் வெளிச்சம். அதாவது அஞ்ஞானம் எனும் இருளை விரட்டி ஞானமாகிய ஒளியை பெறுவதற்கு வழி காட்டுபவரே குரு ஆவார்.

மேலும் கு- என்றால் குணங்களை கடந்தது ரு- என்றால் உருவமற்றது என்றும் பொருள் கொள்ளலாம்.அதாவது உருவமற்ற குணமற்ற தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வழிகாட்டுபவரே குரு ஆவார்.

உண்மையான குரு தன் சீடனுக்கு மிக சிறந்ததை போதிக்கிறார்.

சீடன் அறியாமையில் தான் விரும்புவதை கேட்க குருவோ அவனுக்கு எது மிக நல்லதோ அதையே போதிக்கிறார்.

ஒரு உண்மையான சீடன் முழுமையான கீழ்படிதலுடன் குருவின் ஆணைகளை கடைபிடிக்க வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஆன்மீக பயற்சிகளில் வெற்றி தாமதமாகதான் கிடைக்கின்றது.
நாங்கள் எதிர்பார்ப்பது போல் உடனடியாக எதுவும் நடப்பதில்லை.
இது குறித்து தங்களின் மேலான அறிவுரைகளை வழங்க வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:

ஆன்மீக சாதனை பற்றி சரியான புரிதல் உங்களுக்கு இல்லை என்பதையே இது காட்டுகிறது.

நீங்கள் சிறுவனாக இருக்கும் போது உங்களின் பள்ளிக்கல்வி தொடங்குகிறது.

ஆரம்ப பள்ளியிலிருந்து நடுநிலை பள்ளி மேனிலைபள்ளி கல்லூரி கல்வி என்று முன்னேறி செல்கிறீர்கள்.

இறுதியில் பட்டம் பெறுகிறீர்கள்.
இந்த நீண்ட பயணத்தில் நீங்கள் எவ்வளவு பாடுபட்டீர்கள்.

இதற்கே இப்படி என்றால் ஆன்மீக பாதையில் முன்னேறி சென்று இறுதி இலக்கான தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள நீங்கள் எவ்வளவு காலம் தீவிரமான பயிற்சிகளில் ஈடுபட வேண்டும்.

அப்படி இருக்கும் போது நீங்கள் உனடியாக வெற்றி கிடைக்க வேண்டும் என எண்ணுவது தவறானதாகும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்களும் தியானம் போன்ற ஆன்மீக பயற்சிகளில் ஈடுபடுகிறோம்.

எங்களுடைய இந்த முயற்சிகளை கண்டு தாங்கள் மகிழ்ச்சி அடைகின்றீர்களா ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:
நீங்கள் செய்வதை தினசரி தியானம் என்று நீங்கள் கூறி கொள்கிறீர்கள்.
ஆனால் அந்த பயிற்சியை முறையாக செய்வதில்லை.

நீங்கள் தியானத்தில் உட்காருவது உண்மைதான்.

ஆனால் உங்கள் மனமோ வெளி உலகத்தை பற்றி யே சிந்தித்து கொண்டிருக்கிறது.இன்றைக்கு நாம் என்ன மதிய உணவு எடுத்து கொள்ள போகிறோம்.நம் சலவை தொழிலாளி எப்போது துணிகளை கொண்டு வந்து தருவார் என்பது போன்ற சிந்தனைகளிலேயே நீங்கள் ஈடுபட்டு இருக்கிறீர்கள்.

இப்படி உட்கார்ந்திருப்பது உண்மையான தியானமே அல்ல.

உதாரணத்திற்கு ஸ்வாமியின் தரிசனத்திற்காக நீங்கள் இங்கே காத்திருக்கிறீர்கள்.ஒரு கதவு திறக்கும் சத்தமோ கார் வரும் சத்தமோ கேட்டால் கூட ஆஹா ஸ்வாமி தான் வந்து விட்டாரோ என அது உங்கள் கவனத்தை ஈர்க்கிறது.உங்கள் மனம் ஸ்வாமி வருவதை பற்றியே சிந்தித்தபடி இருப்பதால் ஒவ்வொரு அசைவும் ஸ்வாமியின் வருகை பற்றியதாகவே உங்களுக்கு தோன்றுகிறது.

மாறாக நீங்கள் கவன சிதறலுடன் இருந்தால் ஸ்வாமி வந்து உங்களுக்கு நேராக நின்றால் கூட நீங்கள் அவரை கவனிக்க மாட்டீர்கள்.

எனவே தியானம் என்பது கடவுளின் மீது நூறு சதவீதம் கவனத்தை செலுத்துவதாக இருக்க வேண்டும்.

ஒரு சிறிதும் மாறாமல் முழு கவனத்துடன் கடவுளின் மீது மனதை நிலை நிறுத்த வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி ஆன்மீக சாதனைகளில் ஈடுபடுவதற்கு நாங்கள் எவற்றை எல்லாம் கற்க வேண்டும்.எந்தவிதமான புனித நூல்களை பயில வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
அதிகமான விவரங்களை தேடி பயில வேண்டிய அவசியமில்லைசிலர் ஆன்மீக புத்தகங்களை படிப்பது உபன்யாசகம் கேட்பது என பல வருடங்களாக செய்து கொண்டு வருகிறார்கள்.

அதனால் என்ன பயன்.

அவர்கள் ஆன்மீக பாதையில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருக்கும் இடத்திலேயே இருக்கிறார்கள்.

காரணம் என்ன.

தாம் கற்றவற்றை அவர்கள் முறையாக கடைபிடிககாததே காரணமாகும்.

நீங்கள் அதிகமாக படிக்க வேண்டியதில்லை.பல்வேறு விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டியது இல்லை.கற்றவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் நடைமுறை படுத்தினாலே போதும்.

தற்கொலை செய்து கொள்வதற்கு ஒரு சின்ன குண்டூசி போதுமே. மற்றவர்களை கொல்வதற்கு தான் துப்பாக்கியோ கத்தியோ தேவை.அது போலவே உங்கள் சுய முன்னேற்றத்திற்கு ஒரு ஆன்மீக ஒழுக்கமாவது தினசரி வாழ்வில் கடைபிடிக்க பட வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி உங்களிடமிருந்து மேலான இந்த நல்லுரைகளை கேட்பதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.இருந்தாலும் எங்களால் மனதை ஒரே நிலையில் வைக்க முடிவதில்லையே.அது எப்போதும் அலைபாய்ந்து கொண்டே இருக்கிறதே.

இப்படி சலன பட்டுக்கொண்டே இருப்பது தான் மனதின் இயல்பா.

ஸ்வாமியின் பதில் :
உங்கள் மனம் அலைபாய்வதாகவும் தெய்வீகத்தின் மீது கவனம் செலுத்த முடியாமல் போவதாகவும் கூறுகிறீர்கள்.

உண்மையில் மனம் என்று தனியாக எதுவுமே இல்லை.எண்ணங்களின் தொகுப்பே மனமாகும்.

ஆசைகளின் தொகுப்பே மனமாகும்.
நூல்கள் நன்கு சேர்த்து நெய்யபட்ட ஒரு துணியை போன்றதே மனம்.துணியிலிருந்து நூலை ஒவ்வொன்றாக எடுத்து விட்டால் அங்கு துணியே இருக்காது அல்லவா.அது போல் மனதில் தோன்றுகின்ற ஆசைகளை முழுவதுமாக அகற்றி விட்டால் அங்கே மனமே இருக்காது.இதுவே மனோலய அதாவது மனமற்ற நிலையாகும்.

அனைவருக்கும் நன்றி.

வர இருக்கின்ற நாட்களில் மேலும் நம் ஸ்வாமியின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்.

ஜெய் சாயிராம்